வேலனை காட்டும் வேதம்



விசு அய்யர்

நூல் அறிமுகம்

நூலின் பெயர்	: **வேலனை காட்டும் வேதம்**
நூல் ஆசிரியர்	: விசு அய்யர்
எழுத்து	: 11 புள்ளி
முதற் பதிப்பு	: 2023
உரிமை	: ஆசிரியருக்கு
கணினி அச்சு உதவி	: மணி பதிப்பகம்
பக்கம்	: 16
மதிப்பு	: இந்திய ரூபாயில் ரூ.30



வாழ்த்துரை

இந்த நூல் ஆசிரியர் திரு விசு அய்யர் அவர்கள் தனது நூலுக்கு தொடர்ந்து மதிப்புரை வழங்க வாய்ப்பு தந்து வருகிறார். அவருக்கு மனம் நிறைந்த நன்றிகள்.



R. Manikandan, B.Com.
Treasurer, arulalayam

என் மீதுள்ள அன்பா அல்லது நானும் இது போல சிந்தனைகளை தொகுத்து நூலாக்க வேண்டும் என்ற எண்ணமா தெரியவில்லை.. இருப்பினும் கிடைத்து இருக்கும் வாய்ப்பை பயன்படுத்திக் கொள்ள, நானும் எனது பங்களிப்பை தருகிறேன்.

எழுதுவது அதை தாண்டி ரசிக்கும்படி படைப்பது என அந்த கலையை தனக்குள் வைத்து இருக்கும் இந்த நூல் ஆசிரியரின் இந்த படைப்பு, ஒரு தொகுப்பு.

சைவர்களின் உயிர் வேதமான தோத்திர நூல்கள், பன்னிரு திருமுறைகள் தான். அந்த பன்னிரு திருமுறைகளில் தமிழ் பெருங்குடி மக்கள் முருகனை மனதில் வடித்து தொழும் தெய்வம் முருகப் பெருமான் தான்.

குறிஞ்சிக் கடவுளான முருகப் பெருமானை, திருமுறைகளில் காட்டப்படும் இடங்களை சுட்டி அவைகளை தொகுத்து முருக பக்தர்களுக்காக படைத்து தந்து இருக்கிறார் இந்த நூல் ஆசிரியர்.

படிப்பதற்கு தொகுப்பு ஒரு சுவையாக இருந்தாலும், சைவ அன்பர்களுக்கு இது ஒரு பிரசாதமாகவே இருக்கும் என்பதில் அசாத்திய நம்பிக்கை எனக்கு உண்டு. முருக பக்தர்களுக்கு ஏற்படும் மகிழ்ச்சி எண்ணிச் சொல்ல முடியாது.

ஒரு சோதிட குழுவில், தற்செயலாக இந்த நூல் ஆசிரியரை சந்தித்து அவர் தம் சோதிட சிந்தனைகளையும், ஆய்வு குறிப்புகளையும் படித்து ரசித்து பழகியவன் என்பதுடன் தொடர்ந்து ஆசிரியரின் இன்ன பிற புத்தகளுக்கு வாழ்த்துரை தந்து உள்ளேன் என்பதில் உவகையுடன் மகிழ்ச்சி கொள்கிறேன்.

இந்த புத்தகம் தொகுப்பு நூலாக வந்துள்ளமையால், அதனை ஆன்மிக அன்பர்கள் வாங்கி படித்து இன்புற வேண்டும் என மெத்த பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன்.

பன்முக திறமை கொண்ட இந்த நூல் ஆசிரியரின், படைப்புகளில் இது இன்னொமொரு தொகுப்பு. இது மக்கள் மனதில் இடம் பிடிக்கும் என உறுதியாக சொல்லலாம். இந்த நூல் ஆசிரியர் ஊக்கம் குறையாமல் மேலும் பல நூல்களை படைக்க வேண்டும் என எனது விருப்பத்தை பதிவு செய்கிறேன்.

இந்த புத்தகத்தை வாங்கி படித்து, சிந்தனைகளை வளர்த்து, பயன் அடைந்து நூல் ஆசிரியரை ஊக்கப்படுத்த வேண்டும் என அன்புடன் விரும்புகிறேன்..

உங்கள்

மணிகண்டன்

maniiyer73@gmail.com

என்னுரை

“கந்தக் கடவுள் நமது சொந்தக் கடவுள்” என கந்தசாமியை அன்போடு போற்றும் முருக பக்தர்கள் நம்மை சுற்றி குறிப்பாக தமிழகத்தை சுற்றி நிறையவே இருக்கிறார்கள்.

சிவ பெருமானையே முழு முதற்கடவுளாக கொண்ட சைவ அன்பர்கள், சதாசிவ மூர்த்தமாக முருக பெருமானை எடுத்துக் கொள்ளும் அன்பர்களும், முருகனை ஆறுமுக சிவன் எனவே போற்றி வழிபடுவதை நாமும் பார்த்து இருப்போம்.

சைவ அன்பர்களுக்கு திருமுறை தான் பிரதானம் என்பது போல முருக பக்தர்களுக்கு திருப்புகழ் தான் பிரதானம் என்பதை நாம் அறிவோம். ஆண்டு தோறும் வரும் கந்தர் சஷ்டி விழாவில், முருக வழிபாடு செய்வது, திருப்புகழ் பாடுவது, பாம்பன் சுவாமிகள் அருளிய பனுவல்களை படிப்பது கேட்பது பாடுவது என முருகனை மனதில் பதிக்கும் அன்பர்களுடன், சைவ அன்பர்களுக்காக, கந்தக் கடவுளை திருமுறைகளில் காட்டியுள்ள குறிப்புகளை தொகுத்து இந்த புத்தகத்தை படைத்து தந்து இருக்கிறோம்.

தமிழ் வேதமாக போற்றப்படும் பன்னிரு திருமுறைகளில் இருந்து பாடல் குறிப்புகளை மட்டும் தொகுத்து தந்து உள்ளோம். இதன் பொருளை இறைவன் உள் நின்று உணர்த்துவான் என்பதாலும், அதை தெரிந்து கொள்ள விரும்பும் அன்பர்கள் தம்மிடம் உள்ள திருமுறை நூல்களில் இருந்து எடுத்து பெறலாம் என்பதற்காகவும் பாடல் எண் குறிப்புகளையும் தந்து உள்ளது.

பஞ்சாட்சர மந்திரத்திற்குரிய இறைவனாரும், க்ஷாடாக்ஷர மந்திரத்திற்குரிய வேலவனும் வேறு அல்ல. முருகன் அறுமுக சிவனே என்ற நோக்கில் அன்பர்கள் வேறுபாடு கருதாது இந்த தொகுப்பை படித்து இன்புற வேண்டும் என அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

பன்னிரு திருமுறைகளில் ஈடுபாடு நிறைந்த அன்பர்கள் கந்தர் சஷ்டியின் போது, எடுத்து பாடி இறையின்பம் பெற இந்த தொகுப்பு பயனுள்ளதாக இருக்கும் என நம்புகிறோம். சஷ்டியின் போது மட்டுமின்றி வாய்ப்பு கிடைக்கும் மற்ற சமயங்களிலும் படிக்கலாம் என்ற அன்பு வேண்டுகோளை வைக்கிறேன்.

“வேலனைக் காட்டும் வேதம்” என்ற இந்த நூலினை வழக்கம் போல கணினி அச்சு செய்து புத்தகமாக உருவாக்கி கொடுத்த **மணிபதிப்பகத்தாரு**க்கு நன்றியை பதிவு செய்கிறேன்.

எனது வேண்டுகோளை ஏற்று நூலிற்கு வாழ்த்துரை தந்த **அருளாலயம் அமைப்பின் பொருளாளர் திரு மணிகண்டன் அய்யர் அவர்களுக்கு** மனம் நெகிழ்ந்த நன்றியையும் பாராட்டுதல்களையும் பதிவு செய்கிறேன்.

நமது நூல் படைப்பின் வரிசையில் இன்னொரு ,மைல் கல் என்ற ஆவலில் இந்த புத்தகத்தினை வழக்கம் போல வாங்கி படித்து பயன் அடைந்து நூல் ஆசிரியரை ஊக்கப்படுத்த வேண்டும். இந்த நூல் அமேசான், விக்கி மீடியா மற்றும் மின் நூலகம் போன்ற தளங்களில் கிடைக்கும்.

பேரன்புடன்

விசு அய்யர்

iyervisuiyer@gmail.com

திருஞானசம்பந்தர் அருளியது - முதல் திருமுறை.
தலம்:திருமுதுகுன்றம். பண் : நட்டபாடை.

அருகரொடு புத்தர் அவர்
அறியாஅரன் மலையான்
மருகன்வரும் இடபக்கொடி
உடையான் இடம் அலர் ஆர்
கருகுகுழல் மடவார்கடி
குறிஞ்சி அது பாடி
முருகன்னது பெருமைபகர்
முதுகுன்று அடைவோமே. (1:12:10)

திருஞானசம்பந்தர் அருளியது - இரண்டாம் திருமுறை.
திருஅரசிற்கரைப்புத்தூர் . பண் : காந்தாரம்

வள்ளி முலைதோய் குமரன்
தாதை வான்தோயும்
வெள்ளி மலைபோல் விடை ஒன்று
உடையான் மேவும் ஊர்
தெள்ளி வருநீர் அரிசில்
தென்பால் சிறைவண்டும்
புள்ளும் மலிபூம் பொய்கை
சூழ்ந்த புத்தூரே. 2-63-6

திருஞானசம்பந்தர் அருளியது - இரண்டாம் திருமுறை.
திருநறையூர் சித்தீச்சரம். பண் : பியந்தைக் காந்தாரம்.

இடமயில் அன்ன சாயல் மடமங்கை தன்கை
எதிர்நாணி பூண வரையில்
கடும் மயில் அம்பு கோத்து எயில்செற்றுகந்து
அமரார்க்கு அளித்த தலைவன்
மடமயில் ஊர்திதாதை எனநின்று தொண்டர்
மன நின்ற மைந்தன் மருவும்
நடம் மயில் ஆல நீடு குயில்கூவு சோலை
நறையூரின் நம்பன் அவனே. (2:87:2)

திருஞானசம்பந்தர் அருளியது - இரண்டாம் திருமுறை.
திருப்பிரமபுரம். பண் : காந்தாரம்.

விளங்கியசீர்ப் பிரமனூர் வேணுபுரம்
புகலிவெங் குருமேற் சோலை
வளங்கவருந் தோணிபுரம் பூந்தராய்ச்
சிரபுரம்வண் புறவ மண்மேல்
களங்கமிலூர் சண்பைகமழ் காழிவயம்
கொச்சைகழு மலம் என்று றின்ன
இளங்குமரன் தன்னைப் பெற்று இமையவர்தம்
பகை எறிவித்த இறைவன் ஊரே. 2-73-1

திருஞானசம்பந்தர் அருளியது - மூன்றாம் திருமுறை
திருத்தென்குடித்திட்டை.- பண் : கொல்லி.

ஊறினார் ஓசையுள் ஒன்றினார் ஒன்றிமால்
கூறினார் அமர்தருங் **குமரவேள்** தாதையூர்
ஆறினார் பொய்யகத்து ஐயுணர் எய்திமெய்
தேறினார் வழிபடும் தென்குடித் திட்டையே. (3:35:6)

திருநாவுக்கரசு சுவாமிகள் அருளியது - நான்காம் திருமுறை
திருநேரிசை - பொதுப்பாடல்.

உடம்பு எனும் மனை அகத்துள்
உள்ளமே தகளியாக
மடம்படும் உணர்நெய்யட்டி
உயிர் எனும் திரிமயக்கி
இடம்படு ஞானத் தீயால்
எரிகொள இருந்துநோக்கில்
கடம்பமலர் காளைதாதை
கழல் அடி காணலாமே. (4:75:4)

திருநாவுக்கரசு சுவாமிகள் அருளியது - நான்காம் திருமுறை
திருநேரிசை - திருப்பெருவேளூர்

குறவிதோள் மணந்த செல்வக்
குமரவேள் தாதை என்றும்
நறவிள நறுமென் கூந்தல்
நங்கையோர் பாகத் தானைப்
பிறவியை மாற்று வானைப்
பெருவேளூர் பேணி னானை
உறவினால் வல்ல னாகி
உணருமாறு உணர்த்து வேனே. 4-60-3

திருநாவுக்கரசு சுவாமிகள் அருளியது - ஐந்தாம் திருமுறை.
திருகுறுந்தொகை. - திருப்பூவனூர்.

நாரணன்னொடு நான்முகன் இந்திரன்
வாரணன் **குமரன்** வணங்கும் கழற்
பூரணன் திருப்பூவனூர் மேவிய
காரணன் எனை ஆளுடைக் காளையே. (2:65:10)

திருநாவுக்கரசு சுவாமிகள் அருளியது - ஐந்தாம் திருமுறை.
திருகுறுந்தொகை. - திருக்கோழம்பம்.

சமர சூரபன் மாவைத் தடிந்தவேற்
குமரன் தாதைநற் கோழம்பம் மேவிய
அமரர் கோவினுக்கு அன்புடைத் தொண்டர்கள்
அமர லோகமது ஆளுடை யார்களே. 5-64-10

திருநாவுக்கரசு சுவாமிகள் அருளியது - ஆறாம் திருமுறை
திருத்தாண்டகம்- திருஅதிகை வீரட்டானம் :

வெள்ளிக்குன்றன்ன விடையான் தன்னை
வில்வலான் வில்வட்டங் காய்ந்தான் தன்னை
புள்ளி வரிநாகம் பூண்டான் தன்னைப்
பொன்பிதிர்ந் தன்ன சடையான் தன்னை
வள்ளி வளைத்தோள் முதல்வன் தன்னை
வாரா வுலகருள வல்லான் தன்னை
எள்க இடுபிச்சை ஏற்பான் தன்னை
ஏழையேன் நான்பண் டிகழ்ந்தவாரே. (6:3:2)

திருநாவுக்கரசு சுவாமிகள் அருளியது - ஆறாம் திருமுறை
திருத்தாண்டகம்- திருஅதிகை வீரட்டானம்

அரவணையான் சிந்தித் தரற்றும்மடி
அருமறையான் சென்னிக் கணியாமடி
சரவணத்தான் கைதொழுது சாரும்மடி
சார்ந்தார்கட்கு எல்லாஞ் சரணாமடி
பரவுவார் பாவம் பறைக்கும்மடி
பதினெண் கணங்களும் பாடும்மடி
திரைவிரவு தென்கெடில நாடன்னடி
திருவீரட் டானத்து எம் செல்வனடி 6-6-1

திருநாவுக்கரசு சுவாமிகள் அருளியது - ஆறாம் திருமுறை
திருத்தாண்டகம்- திருமறைக்காடு

கள்ளி முதுகாட்டில் ஆடி கண்டாய்
காலனையுங் காலாற் கடந்தான் கண்டாய்
புள்ளி உழைமானின் தோலான் கண்டாய்
புலிஉரிசேர் ஆடைப் புனிதன் கண்டாய்
வெள்ளி மிளிர்பிறைமேற் சூடி கண்டாய்
வெண்ணீற்றான் கண்டாய் நஞ் செந்தின் மேய
வள்ளி மணாளற்குத் தாதை கண்டாய்
மறைக்காட்டு உறையும் மணாளன் தானே 6-23-4

திருநாவுக்கரசு சுவாமிகள் அருளியது - ஆறாம் திருமுறை
திருத்தாண்டகம்- திருக்குடந்தை கீழ்கோட்டம்

கார் இலங்கு திரு உருவத்த அவற்கும் மற்றைக்
கமலத்திற் காரணற்குங் காட்சி ஒண்ணாச்
சீர் இலங்கு தழற்பிழம்பிற் சிவந்தார் போலுஞ்
சிலைவளைவித்த அவுணர் புரஞ் சிதைத்தார் போலும்
பார் இலங்கு புனல் அனல்கால் பரமா காசம்
பருதிமதி சுருதியுமாய்ப் பரந்தார் போலுங்
கூர் இலங்கு வேற்குமரன் தாதை போலுங்
குடந்தைக்கீழ்க் கோட்டத்து எம் கூத்த னாரே 6-75-7

சுந்தரமூர்த்தி சுவாமிகள் அருளியது ஏழாம் திருமுறை : திருக்கோலக்கா. - பண் : தக்கேசி.

ஆத்தம் என் தனை ஆளுகந் தானை
அமரர் நாதனைக் **குமரனை**ப் பயந்த
வார்த் தயங்கிய முலைமடமானை
வைத்து வான்மிசைக் கங்கையைக் கரந்த
தீர்த்தனைச் சிவனைச் செழுந்தேனைத்
தில்லை அம்பலத்துள் நிறைந்தாடும்
கூத்தனைக் குருமாமணி தன்னைக்
கோலக்காவினிற் கண்டு கொண்டேனே. (7:62:4)

சுந்தரமூர்த்தி சுவாமிகள் அருளியது ஏழாம் திருமுறை : திருஊன காந்தன் தளி . - பண் : இந்தளம்

திங்கள் தங்கு சடையின் மேலோர்
திரைகள் வந்து புரள வீசும்
கங்கை யாளேல் வாய்தி றவாள்
கணப தியேல் வயிறு தாரி
அங்கை வேலோன் குமரன் பிள்ளை
தேவி யார்கொல் தட்டி யாளால்
உங்க ளுக்கு ஆட் செய்ய மாட்டோம்
ஓண காந்தன் தளியு ளீரே. 7-5-2

சுந்தரமூர்த்தி சுவாமிகள் அருளியது ஏழாம் திருமுறை :
திருவாரூர் - பண் : காந்தாரம்.

நமர்பிறர் என்பது அறியேன்
நான்கண்ட தேகண்டு வாழ்வேன்
தமரம் பெரிதும் உகப்பன்
தக்கவாறு ஒன்றும் இலாதேன்
குமரன் திருமால் பிரமன்
கூடிய தேவர் வணங்கும்
அமரன் இருப்பதும் ஆரூர்அவர்
எம்மையும் ஆள்வரோ கேளீர். 7-73-9

மாணிக்கவாசக சுவாமிகள் அருளியது திருவாசகம்
எட்டாம் திருமுறை திருவுந்தியார்

:

பாலகனார்க்கு அன்று பாற்கடல் ஈந்திட்ட
கோலச் சடையற்கே உந்தீபற
குமரன் தன் தாதைக்கே உந்தீபற. (7:14:17)

மாணிக்கவாசக சுவாமிகள் அருளியது திருவாசகம் எட்டாம் திருமுறை திருப்பொற்சுண்ணம்.

சுந்தர நீறு அணிந்தும் மெழுகித்
        தூயபொன் சிந்தி நிதிபரப்பி
இந்திரன் கற்பக நாட்டியெங்கும்
        எழிற்சுடர் வைத்துக் கொடியெடுமின்
அந்தரர் கோன் அயன் தன் பெருமான்
        ஆழியான் நாதன் நல் **வேலன்** தாதை
எந்தரம் ஆள் உமையாள் கொழுநற்கு
        ஏய்ந்தபொற் சுண்ணம் இடித்து நாமே. (8:9:3)

ஒன்பதாம் திருமுறை : சேந்தனார் அருளியது திருவிசைப்பா திருவிடைக்கழி - பண்: பஞ்சமம்

மாலுலா மனந்தந் தென்கையிற் சங்கம்
        வவ்வினான் மலைமகள் மதலை
மேலுலாந் தேவர் குலமுழுதாளும்
        குமரவேள் வள்ளிதண் மணாளன்
சேலுலாங் கழனித் திருவிடைக்கழியில்
        திருக்குரா நிழற்கீழ் நின்ற
வேலுலாந் தடக்கை வேந்தன்என் சேந்தன்
        என்னும்என் மெல்லியள் இவளே. (9:7:1)

ஒன்பதாம் திருமுறை :
சேந்தனார் அருளியது திருப்பல்லாண்டு:
பொன்னம்பலம் பண்: பஞ்சமம்

சேவிக்க வந்த அயன் இந்திரன் செங்கண்மால்
 எங்கும் திசை திசையன
கூவிக் கவர்ந்து நெருங்கிக் குழாங்குழா
 மாய்நின்று கூத்தாடும்
ஆவிக் கமுதையென் ஆர்வத் தனத்தினை
 அப்பனை ஒப்பமரர்
பாவிக்கும் பாவகத் தப்புறத் தானுக்கே
 பல்லாண்டு கூறுதுமே. (9:1:6)

கருவூர் தேவர் அருளியது திருசாட்டியக்குடி
ஏழிருக்கை - பண்: பஞ்சமம்

திருமகன் **முருகன்** தேவியேல் உமையாள்
 திருமகள் மருமகன் தாயாம்
மருமகன் மதனன் மாமனேல் இமவான்
 மலையுடை அரையர்தம் பாவை
தருமலி வளனாம் சிவபுரன் தோழன்
 தனபதி சாட்டியக் குடியார்
இருமுகம் கழல்முன்று ஏழுகைத் தலம்ஏழ்
 இருக்கையில் இருந்தாஈ சனுக்கே 9-15-5

பத்தாம் திருமுறை :
திருமூலர் அருளியது திருமந்திரம் -

எம்பெருமான் இறைவா முறையோ என்று
வம்ப வீழ் வானோர் அசுரன் வலிசொல்ல
அம்பவள மேனி **அறுமுகன்** போயவர்
தம்பகை கொல்லென்ற தற்பரன் தானே. (10:2:20:1)

பதினோராம் திருமுறை:
நக்கீரர் அருளிய ஈங்கோய் எழுபது

உண்டிருந்த தேனை அறுபதங்கள் ஊடிப்போய்
பண்டிருந்த யாழ்முரலப் பைம்பொழில்வாய் கண்டிருந்த
மாமயில்கள் ஆடி மருங்குவரும் ஈங்கோயே
பூமயிலி தாதை பொருப்பு (11:10:10)

சாரல் குறத்தியர்கள் தண்மருப்பால் வெண்பிண்டி
சேரத் தருக்கி மதுக்கலந்து வீரத்
தமர்இனிதா உண்ணும்சீர் ஈங்கோயே இன்பக்
குமரர்முது தாதையார் குன்று. (11:10:40)

கள்ள நோக்கமொடு கைதொழு திறைஞ்சி
எம்மி லோயே பாண அவனேல்
அமரரும் அறியா ஆதி முர்த்தி
குமரன் தாதை குளிர்சடை இறைவன்
அறைகழல் எந்தை ஆருர் ஆவணத் (11:15)

பதினோராம் திருமுறை:
நக்கீர தேவ நாயனார் அருளியது திருமுருகாற்றுப்படை

நக்கீரர் தாமுரைத்த நன்முருகாற் றுப்படையைத்
தற்கோல நாள்தோறும் சாற்றினால் - முற்கோல
மாமுருகன் வந்து மனக்கவலை தீர்த்தருளித்
தான்நினைத்த எல்லாம் தரும் 11-18-16

பன்னிரண்டாம் திருமுறை
சேக்கிழார் அருளிய பெரியபுராணம்:

செய்யமேனிக் கருங்குஞ்சிச்
 செழுங்கஞ்சுகத்துப் பயிரவர்யாம்
உய்யஅமுது செய்யாதே
 ஒளித்ததெங்கே எனத்தேடி
மையல்கொண்டு புறத்தணைய
 மறைந்தஅவர் தாம் மலைபயந்த
தையலோடுஞ் **சரவணத்து**த்
 தனயரோடும் தாமணைவார்.

பொருவருஞ் சிறப்பின் மிக்கார் இவர்க்கினி புதல்வர்ப்பேறே
அரியதென்றெ வரும் கூற அதற்படு காதலாலே
முருகலர் அலங்கற் செவ்வேள் **முருகவேள்** முன்றில் சென்று
பரவுதல் செய்துநாளும் பராய்க்கடன் நெறியில் நிற்பார்.

திருச்சிற்றம்பலம்.

ஆசிரியரின்


மக்கள் மனம் கவர்ந்த பிற நூல்கள்.




























இந்த புத்தகங்களை, ஆன்லைனில்,

அமேசான், விக்கிமீடியா, மின் நூலகம் மற்றும் ஆடியோ புத்தகமாக Channel G podcastல் கேட்கலாம்.



இந்த புத்தக கட்டமைப்புக்கு
பணம் தந்து உதவலாம்.
இது இன்னும் புத்தகம் வெளிவர
ஊக்கம் அளிக்கும்.

குறிப்புகளுக்காக.....

குறிப்புகளுக்காக.....

குறிப்புகளுக்காக.....

நூலாசிரியர் பற்றி...

விசு அய்யர், தமிழ்நாட்டில் உள்ள வீரம் செறிந்த பசும்பொன் முத்துராமலிங்க தேவர் மாவட்டத்தில், சிவகெங்கை சீமையில் இந்துக்களால் சிறப்பாக கொண்டாடப்படும் ஸ்ரீ கிருஷ்ண ஜெயந்தி நன்னாளில், இன்று உலக எழுத்தறிவு தினமாக கொண்டாடப்படும் தினத்தில் தோன்றியவர்.



வரி சட்டத்தில் முதுகலை பட்டம் பெற்றவர். பள்ளி நாள் முதல் தொடர்ந்து சிறந்த மாணவனாக தேர்ந்து எடுக்கப்பட்ட இவர் இந்திய அளவிலான நினைவு திறன் போட்டியில் பரிசு பெற்றவர். தேசிய அளவிலான அதிவேக தட்டச்சு போட்டியில் வெற்றி பெற்றவர். “சித்தாந்த ரத்னா”, “திருவருட் செல்வர்”, “கைரேகை கலைஞன்” போன்ற இவர் பெற்ற பாராட்டுக்களும் நன்மதிப்பும் பெருமைக்கு உரியன.

இன்று வரை உண்மையான பிரம்மச்சரிய வாழ்க்கையில், உணவிலும், உணர்விலும் இயற்கையோடு இனைந்து வாழும் சீரிய ஒழுக்கத்தை கொண்டவர். பெரியபுராணம், திருக்குறள், மற்றும் சைவ திருமுறைகளில் ஆழ்ந்த ஈடுபாடு கொண்ட இவர் சமய இலக்கியங்களில் பல ஆய்வு கட்டுரைகளை பதிப்பித்து உள்ளார்.

பன்முக திறமை கொண்ட இவர் எழுதிய சோதிட புத்தகங்களும் வார இதழில் எழுதும் தொடர் கட்டுரைகளும் வாசகர்கள் நெஞ்சத்தை கிள்ளி செல்லும். இவருக்கு என்றே ஒரு வாசகர் கூட்டம் இவரை சுற்றி தொடரும்.

சென்னை அரிமா சங்கம், சென்னை சுழற் சங்கம், அறிதுயில் சங்கம் மற்றும் குடும்ப நற்பணி மன்றம் போன்ற பல இடங்களில் பல்வேறு தலைப்புகளில் உரை நிகழ்த்தி உள்ளார்.

உடலாலும் உள்ளத்தாலும் சீரிய ஒழுக்கத்தினாலே இன்றும் சொல்லிலும் செயலிலும் இளைஞனாகவே இருக்கின்றார். சொந்த வாழ்க்கையில் மட்டுமின்றி, நடைமுறை வாழ்க்கையிலும் ஒரு ஒழுக்க முறையினை செயல்படுத்தும் இவர் கையில் திருக்குறளும், பையில் திருநீறும், மெய்யில் உருத்திராக்கமும் இருக்கும் என்பதே இவரின் எளிய அடையாளம்.